## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

## TL 3102 தமிழ் இலக்கிய மரபில் பாரதியின் ஆக்கங்கள்

நேரம் : 02 மணித்தியாலங்கள்

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

---

01. 'சுப்பிரமணிய பாரதியார் தமிழ்க் கவிதையுலகில் புதிய யுகமொன்றினைத் தோற்றுவித்தார்' இக்கூற்றினை மதிப்பிடுக.

02. (அ) கவிதை நடை பற்றிப் பாஞ்சாலிசபத முன்னுரையில் பாரதி குறிப்பிடும் கருத்து யாது?

    (ஆ) மொழியுணர்வு பாரதியின் கவிதைகளிலும் கட்டுரைகளிலும் வெளிப்படுமாற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

03. பெண்விடுதலை பற்றிப் பாரதி கொண்டிருந்த கருத்துக்களை அவரது ஆக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுக.

04. சமூக நோக்கு பாரதியாரின் சிறுகதைகளில் வெளிப்படுமாற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

05. 'பாரதி ஒரு கவிஞர் மாத்திரமல்லர்; இருபதாம் நூற்றாண்டின் அனைத்து எழுத்துத் துறைகளிலும் காத்திரமாகச் செயற்பட்ட ஒருவர்' பத்திரிகையாளர் என்ற வகையில் அவர் எழுதிய தலையங்கங்கள், கட்டுரைகள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு இக்கூற்றை ஆராய்க.